# வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு பாடம் - 3

வெற்றி பெறுவதற்கு நாம் நம்முடைய வாழ்வின் உண்மையான அர்த்தத்தை புரிந்துகொள்ள வேண்டும். தேவனுக்கு கீழ்ப்படிவதை நாம் தெரிவு செய்ய வேண்டும்.

இதைத்தொடர்ந்து, மூன்றாவது படியாக, தேவன் நம்மை உடைத்து, உருவாக்க நாம் இடம் கொடுக்க வேண்டும் (Allowing God to break and heal you). வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்விற்கு இது அடிப்படையானதும், அவசியமானதுமாய் இருக்கின்றது. மனம் திரும்பின பிறகு இரட்சிப்பைப் பெறுகிறோம். இரட்சிப்பு தேவனோடு உறவை உண்டாக்கித் தருகிறது. இதைத் தொடர்ந்து, உடைத்து உருவாக்க நாம் இடம் கொடுக்க வேண்டும். இது ஒரு தொடர்ச்சியான நிகழ்வாக இருக்கின்றது. இது வாழ்வின் கடைசிவரை நடக்க கூடிய விஷயம். குறிப்பிட்ட சில காரியங்களை நமக்கு கற்றுத் தருகிற வரை இது நடந்து கொண்டே இருக்கும்.

## வேதத்தில் தேவன் உடைத்து உருவாக்கின அனுபவம் பெற்ற மனிதர்கள்:-

தாவீது வாழ்க்கையில் அவன் அரியணையில் அமரும் முன்னே உடைத்து உருவாக்கப்பட்டான். அதுலாம் கெபியைச் சுற்றி ஓட வேண்டியதாய் இருந்தது.

யாக்கோபு வாழ்க்கையில் இந்த அனுபவம் இருந்தது. இவைகளெல்லாம் அவர்களை ஒரு நிலைக்கு உருவாக்கி கொண்டு வந்த பின்பதாக, அந்த நிலைக்கு தகுதிப்படுத்தியது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

தேவன் உடைத்து உருவாக்கும்போது, நாம் எதிர்காலத்தில் தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்படுகிற இடத்திற்கு கடந்து வரக்கூடியவர்களாக முடியும்.

## யாக்கோபை உடைத்து உருவாக்கிய தேவன்:

யாக்கோபு தேவனோடு ஒரு இரவில் தனித்து இருந்தான். தேவனோடு போராடினான். நாம் பொதுவாக தேவனை, யாக்கோபு போராடி மேற்கொண்டான் என்று சொல்லுவோம். ஆனால் உண்மையிலேயே தேவன்தான் அவனோடு போராடி அவனை மேற்கொண்டார் என சொல்ல வேண்டும். (ஆதி.32:24-25) ‘‘யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி, அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று’’.

## யாக்கோபை தேவன் மாம்சத்தில் தோற்கடித்தார்:

''தேவனுடைய இளவரசன்'' என்று அர்த்தம் கொள்ளப்படும் ''இஸ்ரவேல்'' என்ற பெயர் மாற்றப்படும் முன்னர் அவனுடைய தொடைச்சந்து சுளுக்கப்பட்டது. அவன் மாம்சத்தோடு போராடினான். தேவன் அவனுடைய மாம்சத்தின் தொடைச்சந்தை தொட்டு சுளுக்கு உண்டாக்கினார். அவனுடைய மாம்சத்தில் அவனைத் தோற்கடித்தார். ஆவிக்குரிய ரீதியில் இஸ்ரவேல் என்று மாற்றினார். தேவன் அவனை மேற்கொண்டு அவனுடைய பெலன் போனபின்பு, அவனை இளவரசன், அதாவது ''இஸ்ரவேல்'' என்று அழைத்தார்.

## உடைக்கப்பட்ட வாழ்வு:

யாக்கோபினால் நேராக நடக்க முடியவில்லை. முழு பெலன் அவனுக்கு இல்லை. தன்னுடைய பெலத்திலே அவன் நடக்கவில்லை. தேவ பெலத்தில் நடந்தான்.

## நம்முடைய மாம்ச கிரியை:

இன்றும் நம்முடைய மாம்சத்தின் கிரியையை ஒடுக்க தேவன் விரும்புகிறார். நம்மில் ஆவிக்குரிய கிரியைகளை வளர்க்க விரும்புகிறார். ஆவியினால் மாம்சத்தின் கிரியையை அழியுங்கள் என ''பவுல்'' கூறுகிறார். யாக்கோபு வாழ்க்கையில் மாம்சத்தின் காரியங்களில் அவன் உடைக்கப்பட்டான்.

1 கொரிந்தியர் 1:29ன்படி மாம்சமான யாவரும் தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டுவதை அவர் விரும்பவில்லை. மாம்சத்தின் காரியங்களை அவர் கட்டுப்படுத்தி, உடைத்து, ஆவிக்குரிய பிள்ளைகளாக வளர்த்து அதற்குப் பிறகு உலகிலே கனப்படுத்துவார்.

## உடைக்கப்பட்ட பின் யாக்கோபு வாழ்வில் வந்த ஆசீர்வாதம்:

யாக்கோபுவின் வாழ்க்கையில் அவன் தேவனால் உடைத்து உருவாக்கப்பட்ட பிற்பாடு மாபெரும் ஆசீர்வாதம் கிடைத்தது. இன்றுவரை இஸ்ரவேல் என்ற தேசத்திற்கு காரணமாக அவன் பெயர் அமைந்தது. அவனுடைய சந்ததிதான் இஸ்ரவேல் தேசத்தின் சந்ததிகளாக இருக்கின்றனர்.

இந்த மாபெரும் பாக்கியத்திற்கு முன்பதாக யாக்கோபு உடைக்கப்பட்டான், உருவாக்கப்பட்டான்.

## தாவீது வாழ்க்கையை உடைத்து உருவாக்கிய தேவன்:

தாவீது வாழ்க்கையிலும் எருசலேமுக்கு சென்று அரியணையில் அமரும் முன்னே அவன் வாழ்க்கையில் நடந்தது என்ன? அதுலாம் கெபியைச் சுற்றி

அவன் ஓட வேண்டியதாயிருந்தது. தேசாந்திரியாய் சுற்றி திரிய வேண்டியதாயிருந்தது.

பரதேசிபோல, நாயைப்போல, தெள்ளுப்பூச்சியைப் போல காடுகளில், மலைகளில் ஓடி, கெபிகளில் ஒளிந்து காணப்பட்டான். உடைக்கப்பட்டான். பெருமை கொள்ள ஒன்றும் இல்லை. தாழ்ந்த சிந்தை உருவாகியது. பின்பு அரியணை ஏறினான். முன்பு போல தேவனை தொழுதுகொண்டான்.

## தேவன் நம்மை உடைத்து உருவாக்க காரணம்:

நாம் நம்முடைய வாழ்விலே உடைத்து உருவாக்கப்படாத போது, தேவனை விட்டு பின்வாங்கி போய்விடுவோம் என தேவன் அறிந்து இருக்கிறார். ஆகவே மாம்ச சுபாவத்தை உடைத்து ஆவிக்குரிய காரியங்களை உருவாக்க, அதிகமாக தேவன் பிரயாசப்படுகிறார், செயல்படுகிறார், போராடுகிறார்.

போஷிக்கும் முன்னர் பட்டினியாக இருக்கவிடுகிறார். உடுத்துவிக்கும் முன்னர் நம்மை குறைவுள்ளவர்களாக மாற்ற வேண்டியதாயிருக்கிறது. முக்கியமான இடத்திற்கு கொண்டுவரும் முன்னர் நாம் ஒன்றுமில்ல என்ற இடத்திற்கு கொண்டுவர கர்த்தர் விரும்புகிறார். அப்பொழுதுதான் கர்த்தர் உயர்த்தினார் என்று நமக்கும் உலகத்துக்கும் தெரியவரும். வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு ஒரு கடினமான வாழ்வு போல தெரியும். ஆனால் தேவ உதவியோடு இதை நாம் தாண்டி வந்துவிட முடியும்.

## வனாந்திரத்தில் இஸ்ரவேல் ஜனங்களின் பயணம்:

தேவன் இஸ்ரவேல் ஜனங்களை அவர்கள் வனாந்திர பயணத்தின்போது குறைவுபடாமல் நடத்தினார். அதுபோல இந்த பாடுகள் வழியாக நாம் போகும்போது கர்த்தர் நம்மை உடைத்து உருவாக்கும் இந்த அனுபவத்திலே போடும்போது, பகலில் மேகஸ்தம்பமாகவும், இரவில் அக்கினிஸ்தம்பமாகவும் இருப்பார்.

## தாவீது வாழ்க்கையின் அனுபவம்:

**I) தாவீது உயர்த்தப்படும் முன்னே தேவனால் ஜெபிக்கக் கற்றுக் கொள்ளப்பட்டான்:**

<u>**சங்கீதம் 142:1**</u> - **“**கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன்; கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன்.”

கர்த்தரை நோக்கி சத்தமிட்டு கூப்பிடுகிறான். சத்தமிட்டு கெஞ்சுகிறான். இந்த அனுபவம் நம்முடைய உணர்வுகளோடு தேவனை தேடும்போது வரும்.

நம்மை பயனள்ள பாத்திரமாக மாற்ற எவ்விதமாக ஜெபிக்கவேண்டும் என தேவன் சொல்லி தருகிறார். மிகவும் பயனுள்ள இடத்திற்குவர ஜெபிக்க தேவனால் போதிக்கப்படவேண்டும். தாவீது உயர்த்தப்படும்முன்னே தேவனால் ஜெபிக்க கற்றுக் கொடுக்கப்பட்டான். நீங்கள் சிறந்த மனிதராக இருந்துகொண்டு ஜெபிக்க தெரியாதவர்களாக இருந்தீர்களானால் அது அழிவையே கொண்டுவரும். தாவீது அரியணைக்கு வருமுன்னர், தேவனுடைய அரியணைக்கு முன்பாக வந்து ஜெபிக்க கூடிய அனுபவமுடையவனாக மாற்றப்பட்டான். உலக சூழ்நிலையில் நாம் திருப்தியற்றவர்களாக மாறும்போது, தேவனுடைய பிரசன்னத்தில் திருப்தியை பெற்றுக்கொள்கிற இடத்திற்கு வருகிறோம்.

## II) தேவன் மீது நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்ளப்பட்டான்:

**<u>சங்கீதம் 142:3</u>** - **“**என் ஆவி என்னில் தியங்கும்போது, நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர்; நான் நடக்கிற வழியில் மறைவாக எனக்குக் கண்ணிவைத்தார்கள்.”

என் ஆவி என்னில் தியங்கும்போது தேவன் என் பாதையை அறிந்திருக்கிறார். நம்முடைய ஆவி நமக்குள் தியங்கும்போது நமக்கு, நாம் போகவேண்டிய பாதை தெரியாது. இப்படிப்பட்டதான சூழ்நிலையில் என்ன செய்யவேண்டும் என்பதும் நமக்கு தெரியாது. எல்லாமே முடிந்துவிட்டது, நான் என் வாழ்க்கையின் முடிவு பகுதிக்கு வந்துவிட்டேன் என்கிற நிலையில் தேவன் மீது நம்பிக்கை வைத்து தேவ வழிநடத்துதலை பெற்றுக்கொள்ளும்படிக்குத்தான், தேவனையே முழுமையாக சார்ந்துகொள்ளும்படிக்கு தேவன் நம்மை உடைத்து உருவாக்குகிறார். தேவனே, நீங்க என் பாதைகளை அறிந்திருக்கிறீங்க, நான் இப்பொழுதும் உம்மை நம்புகிறேன் என்று தேவனிடம் கூறி அவர்மேல் வைத்திருக்கிற நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும். தன்னுடைய வாழ்வின் முடிவு பகுதிக்கு அவன் வந்தபோதும், தேவன்மீது அவனுக்கிருந்த நம்பிக்கையின் அடிப்படையில் தேவன் அவனை கனப்படுத்தினார். சங்கீதம் 23:4ல் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் தேவன் என்னோடு இருக்கிறார் என சொல்லுகிறார்.

நம்முடைய சூழ்நிலையின் அடிப்படையில் நாம் நம்மை நம்ப முடியாத நிலையிலும், நம்பிக்கையை தேவன்மீது வைக்க வேண்டும். நம்முடைய சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும்போது நாம் நம்மீது நம்பிக்கையுடையவர்களாக இருக்க முடியும். நாம் நம்மையே நம்பமுடியாத சூழ்நிலைகளும், நம்முடைய வாழ்விலே வரக்கூடும். நம்முடைய வாழ்வு மிகவும் நம்பிக்கையற்ற சூழ்நிலைக்கு வரும்போது, இதுவே தேவனை நம்புவதற்கான சாதகமாக சூழ்நிலை என்று

எண்ணி தேவன் மீது நாம் நம்பிக்கை வைப்போமானால், நாம் தேவனால் உயர்த்தப்படுகிற வெற்றியுள்ள வாழ்வுக்கு நேராக கடந்துவர முடியும். ஏனென்றால், நம்முடைய வாழ்வு இப்பொழுது, மற்றவர்களை தேவனண்டை நடத்தக்கூடிய அளவிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. எப்படியென்றால் தேவனிடத்திலிருந்து நாம் ஆறுதலை பெற்றிருக்கிறபடியினால் மற்றவர்களுக்கு ஆறுதல் செய்கிறோம். மிகவும் நம்பிக்கையற்ற இடத்திலிருந்து நம்பிக்கையான இடத்திற்கு வந்திருக்கிறோம். நாம் தேவனை நம்பினபடியால் ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு தேவன் நம்மை கொண்டு வந்துவிட்டார்.

## III) தனியாய் நிற்க பழகும்படி கற்றுக்கொள்ளப்பட்டான்:

<u>சங்கீதம் 142:4</u> - ''வலதுபுறமாய்க் கண்ணோக்கிப்பாரும், என்னை அறிவார் ஒருவரும் இல்லை; எனக்கு அடைக்கலமில்லாமற்போயிற்று; என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை.''

நாம் பயனுள்ள பாத்திரமாக விளங்க தனியாய் நிற்க பழக்குவிக்கப்பட வேண்டும். தேவனுடைய மனிதன் தனியாய் நின்று சாதிக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவன் நம்மை பயிற்றுவிக்கிறார். என் கையை யுத்தத்திற்கு பழக்குவிக்கிறார். தனியாய் நின்று யுத்தம் செய்ய தேவன் பழக்குவிக்கிறார். தேவன் எனக்கு சகாயர் என்று சொன்னால், தேவன் உதவி செய்வார். தலைவனாகவும் மாற்றுவார். நாம் தேவனுக்காக தனியாய் நின்று (மற்றவர்கள் உதவ முன்வராத போதும்) சேவைசெய்ய ஆயத்தமாயிருப்போமானால், தேவன் நம் பட்சத்தில் இருந்து நமக்கு உதவிசெய்வார்.

<u>**மார்ட்டின் லூதர்**</u>

மாட்டின் லூதர் வாழ்க்கையில் அவருடைய நண்பர்கள், அவரை அமைதியாய் இரு அல்லது தீ வைத்து கொளுத்தப்படுவாய். இருக்கிற சபையில் அப்படியே இருந்துவிடுவோம். நாம் சுவிசேஷத்தை விசுவாசித்துக்கொண்டு எங்கே இருக்கிறோம் அங்கேயே, சர்ச் ஆப் ரோம் சபையில் இருந்து விடுவோம் என கூறினார்கள். ஆனால் அவர் அவர்களோடு நிற்க விரும்பவில்லை. தனித்து நின்று போராடினார். அந்திகிறிஸ்துவின் ஆவியோடு இருக்கிற, அவர்களோடு இருக்க, அவருக்கு விருப்பம் இல்லை. மாபெரும் விசுவாசமுள்ள சந்ததியாக, தேவனை சத்தியத்தின்படி ஆராதிக்கிற ஜனங்கள் இன்றும் இருக்கின்றனர். அதற்கு உதாரணமாக தேவன் ஆசீர்வதித்த பாத்திரமாக மார்ட்டின் லூதர் இருந்தார். தனித்து நின்று வெற்றி பெற்றார்.

நீங்களும், நானும் தனித்து நின்று, தேவனை சார்ந்துகொண்டு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ தேவன் விரும்புகிறார்.

### IV) தேவனில் மகிழ்ச்சியுடையவனாக இருக்க கற்றுக்கொள்ளப்பட்டான்:

**<u>சங்கீதம் 142:5</u>** – “கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீரே என் அடைக்கலமும், ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறீர் என்றேன்.”

தேவன் ஒரு மனிதனை உடைத்து உருவாக்கும்போது, அவன் எப்படிப்பட்டவனாக மாறுகிறான், தேவனுடைய காரியத்தில் மாத்திரமே மகிழ்ச்சி உள்ளவர்களாக மாறவேண்டும். அப்படித்தான் தேவன் உடைத்து உருவாக்குகிறார். அப்படிப்பட்வர்களை தேவன் ஆசீர்வதிக்கிறார். தன்னுடைய காரியங்களில் மகிழ்ச்சியுடையவனாக இருக்கவே தேவன் விரும்புகிறார். உலக காரியத்தில் அல்ல, சிற்றின்பத்தில் அல்ல, செல்வத்தில் அல்ல, தேவனிலேயே அவனுடைய மகிழ்ச்சி இருக்கிறது. தேவன்தான் நம்முடைய மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். . தேவனை நம்முடைய பங்காக கொள்ளும்போது, அதுவே மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. இன்றைக்கு உலகிலே மனிதர்கள் பலதரப்பட்ட காரியங்களில் மகிழ்சியடைகிறவர்களாக இருக்கிறார்கள். உலகிலேயே தங்களுடைய பங்கு இருக்க வேண்டும் என்ற நிலையிலேயே அநேகர் இருக்கின்றதைக் காண்கின்றோம். சொத்து, பங்களா, கார், வசதி, வாய்ப்பு இப்படிப்பட்டதான பங்கு எனக்கு வேண்டும் என்ற நோக்கத்தோடே அநேகர் கர்த்தரிடம் வருகிறார்கள். ஆனால் தன்னைத்தான், பங்காக கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

**<u>சாதுசுந்தர்சிங் வாழ்க்கை:</u>**

சாது சுந்தர்சிங் வாழ்க்கையில் இயேசுவை அவர் ஏற்றுக்கொண்டதின் நிமித்தம் அவருடைய உறவினர்கள் அவருக்கு சொத்து கிடையாது என்று கூறினார் மட்டுமல்லாது, விஷம் கொடுத்து கொல்லவும் பார்த்தார்கள். ஆனால் அவர் இயேசுதான் என்னுடைய பங்கு, உலக சொத்து அல்ல என்று கூறினார். எல்லாவற்றையும் விட்டு விட்டு தேவனைப் பின்பற்றினார். நம்முடைய வாழ்வின் மகிழ்ச்சி, தேவன் என்பதாகவும், தேவனுடைய இருதயத்தின் வாஞ்சையே நம்முடைய இருதயத்தின் வாஞ்சையாகவும் மாறும்போது தேவன் நம்மை வல்லமையாக பயன்படுத்துகிற இடத்திற்கு நாம் வந்துவிடுவோம். தேவனை நாம் முக்கிய பங்காக வைக்கும்போது, தேவன் அவருடைய காரியங்களில் நம்மை முக்கிய பங்காக வைப்பார். உலகத்தின்மீது, உலக சௌகரியங்கள் மீது, உலக ஆடம்பரங்களின் மீது நமக்கான ஆவலிலிருந்து நமக்கு விடுதலை தந்து, தேவனில் நாம் மகிழ்ச்சியுடையவர்களாக இருக்கும்படி தேவன் உருவாக்குகிறார்.

**தேவனை பங்காக கொள்வதன் மூலம் வரும் சிறப்பு:**

தேவனுடைய காரியம், அவர் இருதய வாஞ்சை நம்முடையதாக மாறும்போது அவர் நம்மை முக்கியமான இடத்திற்கு கொண்டுவந்து விடுவார். உலகின் மீது வெறுப்பை தருகிறார். இப்படிப்பட்டதான அனுபவத்தை ஆவியானவர் கொண்டு வருகிறார். என் அடைக்கலமும், என் பங்கும், என் மகிழ்ச்சியும் தேவன்தான் என்று சொல்கிற இடத்திற்கு நாம் வரும்படி தேவன் நம்மை உடைத்து உருவாக்குகிறார். உலகத்தின்மீது வெறுப்புடையவர்களாக இருப்பதுதான், சரியான இரட்சிப்பின் அனுபவமாகும்.

**V) அனைத்து தரப்பினருக்கும் ஆசீர்வாதமாக இருக்கும்படி தாழ்த்தப்படுகிற அனுபவத்தை உடையவனாக இருக்க கற்றுக்கொள்ளப்பட்டான்:**

**<u>சங்கீதம் 142:6</u>** - "என் கூக்குரலுக்குச் செவிகொடும், நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன்; என்னைப் பின்தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், அவர்கள் என்னிலும் பலவான்களாயிருக்கிறார்கள்."

சங்கீதக்காரன், நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன் என்கிறான். அதுபோல நாமும் மற்றவருக்கு உதவும் வண்ணமாக தாழ்த்தப்படுகிறோம். தாழ்ந்த சூழ்நிலையை தேவன் அனுமதிக்கிறார். தேவனுடைய ஜனத்திற்கு ஆசீர்வாதமாக மாற அவர் நம்மை சோதித்து, பரிட்சித்து பார்க்கிறார். சமுதாயத்தில் காணப்படுகிற தாழ்த்தப்பட்ட ஜனங்களுக்கு தகுந்த ஆறுதலையும், வழிநடத்துதல்களையும் கொடுத்து, அவர்களும் தேவனை நம்பும்படியாக, தேவனை விசுவாசிக்கும்படியாக, தேவன் இப்படிப்பட்டதான தாழ்த்தப்பட்ட அனுபவத்தோடே கடந்துவரும்படி நடத்துகிறார். நம்முடைய வாழ்க்கையில் அதிக நன்மை உண்டாக, சோதித்து பார்க்கிறார். மட்டுமல்ல நம்மைக்கொண்டு அநேகருக்கு அதிக நன்மை உண்டாக்க அதை அனுமதிக்கிறார். இப்படிப்பட்டதான சோதனைகளை கடந்து நாம் உருவாக்கப்படும்போது, இன்னும் அநேகருக்கு பிரயோஜனமுள்ளவராக மாற தாழ்த்தப்பட்ட நிலைக்கு தேவன் கொண்டுபோகிறார். எந்த விதமான சோதனையும், புடமிடுதலும் இல்லாதவர்களாய் நாம் கடந்து போவோமானால், நாம் நமக்கு பிரயோஜனமுள்ளவர்களாக இருக்க முடியாது. நாம் அனைத்து தரப்பு நிலையிலுமுள்ள ஜனங்களுக்கு ஆசீர்வாதமானவர்களாக இருக்கும்படிக்கே தேவன் நம்மை உடைத்து உருவாக்குகின்றார்.

**பாடுகள் மத்தியில் ஆறுதல்:**

**<u>2 கொரிந்தியர் 1:3-5</u>** - **"**நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு

அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர். எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.''

பாடுகள் பெருகுகிறது போல, ஆறுதலும் பெருகுகிறது. நமக்கு வரும் உபத்திரவத்தில் தேவன் ஆறுதல் செய்கிறார். இவ்விதமாய் மற்றவர்களின் பிரயோஜனத்திற்காக தேவன் நம்மை உடைத்து உருவாக்குகிறார். மற்றவர்களுக்கு ஆறுதல் செய்கிற நிலையிலே நம்முடைய வாழ்க்கையை ஆசீர்வதிக்கிறார். இதனால் தலைவராய் நாம் மாறமுடியும். தாழ்ந்த சூழ்நிலை மத்தியில் அமைதியாய் காத்திருத்தல் மூலமாக நல்ல பாத்திரமாக வாழ முடியும். வேதாகம பக்தர்களும், நமக்கு முன்னே கடந்து சென்ற, சென்றுகொண்டிருக்கிற பரிசுத்தவான்களும் இப்படிப்பட்டதான அனுபவத்தோடு உருவாக்கப்பட்டு மற்றவர்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள்.

## தேவ கிருபை ஜீவதண்ணீர்:

**2 இராஜாக்கள் 3:16,17** - **''**அவன்: கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள். நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்''.

பள்ளத்தாக்கில், வாய்க்காலை வெட்டுவது கடினம். தேவ கிருபை நம்மில் பெருக மனதை விசாலப்படுத்துகிறார். உள்ளத்தின் வாய்க்காலை வெட்ட சொல்லுகிறார். வாய்க்காலை உண்டாக்க மண்ணைவெட்டியை எடுக்க வேண்டும். உள்ளத்தில் கிருபை பெருக, நம்முடைய உள்ளம் விசாலமாக வேண்டும். அதற்காக வெட்டுகிறது போன்ற சில அனுபவங்களைத் தேவன் தருகிறார். தேவன் நம்மை வெட்டி சரிசெய்து விசாலமாக்கும்போது நம்மிலிருந்து அநேகருக்கு ஜீவதண்ணீர் பாய்ந்து போகும்.

ஆறுதலை நம்மில் கொண்டுவர வேதனையான அனுபவங்களை அனுமதிக்கிறார். பெருமை, சுயம், மாம்சத்தின் கிரியை போன்றவைகள் வெட்டி எடுக்கப்படுகிறது. ஆவிக்குரிய அனுபவம், கிருபை, இரக்கம் போன்றவைகள் நம் வாழ்வில் பெருகுகிறது. மற்றவருக்கு ஆறுதல் அளிக்கிற இடத்திற்கு வந்து விடுவோம்.

**VI) தேவனைத் துதிக்கிற மனுஷனாக இருக்கும்படி கற்றுக்கொள்ளப்பட்டான்:**

**<u>சங்கீதம் 142:7</u> - "**உமது நாமத்தை நான் துதிக்கும்படி, என் ஆத்துமாவைக் காவலுக்கு நீங்கலாக்கிவிடும்; எனக்கு நீர் தயவுசெய்யும்போது நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளுவார்கள்."

நம்மை தேவன் வல்லமையாக பயன்படுத்த, நாம் துதிக்கிற மனுஷனாக இருக்க வேண்டும். இதற்காக தேவன் நம்முடைய ஆத்தும இடையூறுகளை மாற்ற வேண்டும். நாம் துதிக்கிற மனிதனாக மாறினால்தான் நம்மை சுற்றி ஒரு கூட்டம் வரும். நாம் வெற்றியை சுதந்தரிக்க முடியும். மற்றவரை தேவனுடைய பணியில் நடத்த முடியும். முறுமுறுத்தால் நம்மை தலைவனாக தேவன் உயர்த்த முடியாது.

துதிக்கிறவன் எப்பொழுதும் நேர்மறையாக (Positive) பேசுவான். தேவன் என்னை உயர்த்துவார் என்கிற நம்பிக்கையோடே பேசுவான். முறுமுறுக்கிறவர்கள் எதிர்மறையாக (Negative) பேசுவார்கள். முறுமுறுக்கிற, மற்றும் எப்பொழுதும் கவலையோடும், வேதனையோடும், தோல்வியின் பகுதியையே பார்க்கிற தலைவனாக நாம் இருந்தால் யாருமே நம்மை பின்பற்றிவர விரும்பமாட்டார்கள்.

தாவீது துதிக்கிற மனிதனாக இருந்ததால் தான் அரியணைக்கு நேரே போனான். எப்போதும் துதித்தல் என்பது நம் வாழ்வில் ஒரு அனுபவமாக மாற வேண்டும். எப்பொழுதும் துதிக்க வேண்டும், எல்லாவற்றிற்காகவும் துதிக்க வேண்டும். இனிமேல் பெற்றுக்கொள்ளப்போகிற காரியங்களுக்காகவும் தேவனைத் துதியுங்கள். நாம் மற்றவர்களுக்கு பிரயோஜனமாக இருக்கும்படி உடைத்து உருவாக்கப்படுகிற ஒவ்வொரு அனுபவங்களுக்காகவும் தேவனை துதிக்க கடமைப்பட்டுள்ளோம்.

**துதிக்கிற மனுஷன் முன்னே வெற்றி ஓடிவரும்:**

வெறும் ஜீவனுள்ள வாழ்வு வாழ்கிறதற்கு பெயர் வெற்றியுள்ள வாழ்வு அல்ல. நாம் பரிபூரண ஜீவனுள்ள வாழ்வு வாழ தேவன் விரும்புகிறார். அதற்காக தான் இயேசு இவ்வுலகிற்கு வந்தார். நாம் நமக்கும், மற்றவருக்கும் பிரயோஜனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் உயிரோட்டமுள்ளவர்களாகவும், உயிரைக் கொடுக்கிறவர்களாயும், (தேவ வார்த்தையினால்) உயிரை உயிர்ப்பிக்கிறவர்களாயும் இருக்க வேண்டும். இது துதிக்கிற மனிதனால் மட்டுமே முடியும். தேவனை அதிகமதிகமாய் துதிக்க

துதிக்க மேலான அற்புதங்களைப் பெற்றுக்கொள்கிற இடத்திற்கு நாம் வந்து விடுகிறோம்.

**எவ்விதமாய் தேவன் நம்மை உடைத்து உருவாக்குகிறார்:**

**சங்கீதம் 34:18** - **“**நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.’’

நொறுக்கப்பட்டவர்களுக்கும், நருங்குண்டவர்களுக்கும் தேவன் சமீபமாயிருக்கிறார். நொறுக்கப்படவில்லையெனில் தேவன் தூரமாயிருக்கிறார். நமக்கு தாழ்ந்த சிந்தனை வேண்டும் என விரும்புகிறார். நம்மை உடைத்து தாழ்ந்த சிந்தனையை உருவாக்குவதுதான், உடைத்து உருவாக்குவதின் அர்த்தம். தேவனுக்கு வளைந்து கொடுக்காதவர்களாக, தேவனுக்கு கீழ்படியாதவர்களாக இருக்கும்போது தேவன் தூரமாயிருக்கிறார்.

நொருங்குண்ட ஆவி உள்ளவர்களை தேவன் அற்பமாய் எண்ணுவது இல்லை. புறக்கணிப்பதும், நிந்திப்பதும், தாண்டிபோகிறதும் இல்லை. நின்று கவனிப்பார். ஆவியில் எளிமை உள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசு கூறியிருக்கிறார்.

**சங்கீதம் 51:17** – ‘‘தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.’’

தேவன் நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஆனால் நாம் பெறுகிற இடத்தில் இல்லை. நாம் பெருமையினால் கட்டப்பட்டு இருந்தால் தேவன் இரக்கமாய் இருந்தும், பிரயோஜனம் இல்லை. உடைக்கப்பட இடம் கொடுக்கவில்லையெனில் தேவன் நம்மைக்கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. ஆவியில் எளிமையுடையவர்களாக இருப்போமானால் பாக்கியவான்களாயிருப்போம். தேவனால் உடைத்து உருவாக்கப்பட்ட ஒருவரால் பெருமையாயிருக்க முடியாது, மாறாக அவருக்குள் தாழ்ந்த சிந்தைதான் இருக்கும். நொருங்குண்ட, நருங்குண்ட இருதயமுடைய அனுபவங்கள்தான் இருக்கும். ஆவியில் எளிமையுள்ளவர்களாய் இருக்கும்போது தேவனால் பயன்படுத்தப்படுகிற மற்றும் வெற்றியுள்ள பாத்திரமாக நாம் இருக்க முடியும்.

கைகளும், வாயும், கட்டப்பட்டிருக்கிற நிலையில் உள்ளவனுக்கு முன்பாக எவ்வளவு அதிகமான போஜனங்கள் இருந்தாலும், தன்னுடைய பசியை ஆற்ற அவனால் முடியாத நிலையில், பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் அவன் இருக்கிறதுபோலவும்தான், இருதயம் பெருமையினால் கட்டப்பட்டிருக்குமானால், உடைத்து உருவாக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுக்காத நிலையில் இருக்குமானால்

நாமும் தேவனுடைய நன்மைகளை பெற்றுக் கொள்ளாதவர்களாகவே இருக்கின்றோம்.

## தேவன் செயல்படும் விதம்:

தேவன் நம்மை நாளுக்குநாள் உடைத்து உருவாக்குகிறவர். மனிதனை மெதுவாக உடைத்து, உடைத்து உருவாக்குகிறார். மிகப்பெரிய பிரச்சனையைப் பயன்படுத்தி உடனடியாக உடைத்து உருவாக்கவும் செய்வார். சிலவேளைகளில் மெதுவாய் உடைக்கும்போது நம்மிடம் பதில் வரவில்லையெனில், உடனடியாக (பெரிய பிரச்சனைகளைப் பயன்படுத்தி) உடைப்பார். இவ்விதமாகவே உடைத்து உருவாக்க விரும்புகிறார். தேவன் இவ்விதமாக தினமும், சோதனையின் மூலமாக, வேதனையின் மூலமாக, பாடுகள் வழியாக, சில கஷ்டப்படுத்துகிற மனிதர்கள் மூலமாக, நீங்கள் வேலைபார்க்கிற இடங்களிலுள்ள மேலான அதிகாரங்களைக் கொண்டு நிகழ்த்துகிற சம்பவங்கள் மூலமாக, கடினமான சூழ்நிலைகள் வழியாக, அதேவேளையில் சரீரபிரகாரமான குறைவுகள் நிமித்தமாக, என்று தேவன் நம்மை உடைத்து உருவாக்க பயன்படுத்துகிற காரியங்களைக் குறித்து சொல்லிக்கொண்டே போகலாம்.

எப்படியாயினும் தேவன் நம்மை உடைத்து உருவாக்க விரும்புகிறார். தேவன் நம்மை உடைக்காத பட்சத்தில் நம்மால் பிரயோஜனமான பாத்திரமாக மாற முடியாது, வெற்றியுள்ள வாழ்வை வாழ முடியாது, அதை அனுபவிக்க முடியாது. ஆகவே நம்முடைய சுயம் சாக தேவன் செயல்பட்டுக்கொண்டே இருக்கிறார். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தேவன் இதை செய்துதான், இந்த நிலைமைக்கு கொண்டுவருகிறார். பாடுகள் உள்ளதுதான் வாழ்வு. தேவனுடைய பிள்ளைகளுக்கு, தேவன் தன்னை உருவாக்குகிறது புரியும். தேவன் மனிதனை உடைத்து உருவாக்கும் விதம் ஒருவருக்கொருவர் வேறுபடும். எல்லாம் அவர் கரத்தில் இருக்கிறது. கீழ்ப்படிய மறுத்தால் உடைக்கப்படுகிற காலம் அதிகமாக இருக்கும்.

மோசே 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் கற்றுக்கொண்டார். புதிய ஏற்பாட்டில் சவுலாய் இருந்து பவுலாக மூன்றரை ஆண்டுகளில் மாறிய அவர், தேவனுடைய காரியங்களை அரேபியா பாலைவனத்தில் போய் கற்றுக்கொண்டார். தேவன் நம்மை உடைத்து உருவாக்க, அநேக காரியங்களை பயன்படுத்துகிறார். உடனே கீழ்படிந்தால், உடனே மாற முடியும். மோசே எதிர்த்து நின்றார் ஆனால் பவுல் உடனே கீழ்படிந்தார். அநேகர் உருவாக்கப்பட முடியாத நிலையில் இருக்க காரணம், தாழத்தப்படுகிற நிலையினை உணராததுதான், என்பதை நாம் அறிய வேண்டும். ஜனங்கள் மத்தியில் மாற்றத்தைக் கொண்டுவர ஊழியர்கள்

பொறுப்பெடுத்துக்கொண்டு, ஜனங்கள் உருவாக்கப்படுவதற்கேதுவான காரியங்களை அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.

**<u>சாத்தான்:</u>**

எல்லாமே சாத்தான் என்று சொல்வது தவறு. சாத்தான் நமக்கெதிராக செயல்பட்டாலும் தேவன் அதை நன்மையாக மாற்றுவார். இடையூறு வருவது எல்லாம், அதாவது முழுவதுமாக சாத்தான் தருகிறது அல்ல. சாத்தான் என்று சொன்னால் நாம் உருவாக்கப்படுகிறது மிகவும் கஷ்டம்.

**<u>முடிவுரை:</u>**

மாம்சீக சுபாவத்தை மாற்றி தேவ சுபாவம், திவ்ய சுபாவம், இதை உருவாக்க தேவன் பாடுபடுகிறார். பொறுமையை கற்று கொள்ள வேண்டும். நாம் கீழ்படிந்து சீக்கிரமாய் உடைத்து உருவாக்க தேவனுக்கு இடம் கொடுத்தால், தேவன் பயன்படுத்துகிற நிலைக்கு வந்து விட முடியும். உடனுக்குடன் கீழ்படிவோம், வெற்றியுள்ள வாழ்வு வாழ்வோம்.

## கேள்விகள்:

1. வேதத்தில் தேவன் உடைத்து உருவாக்கின அனுபவம் பெற்ற மனிதர்கள் யார், யார் என்பதனையும், அவர் எவ்விதமாய் உடைத்து உருவாக்கப்பட்டார்கள் என்பதனையும் அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட ஆசீர்வாதங்கள் என்னென்ன என்பதனையும் கூறுக.
2. தேவன் நம்மை உடைத்து உருவாக்க காரணம் என்ன என்பதனைக் கூறுக.
3. தாவீது தேவனால் உடைத்து உருவாக்கப்படும்போது என்னென்ன அனுபவங்களை பெற்றுக்கொண்டார் என்பதனை சங்கீதம் 142 ஐ மையமாக வைத்து விளக்கமாக கூறுக.
4. தேவன் நம்மை உடைத்து உருவாக்க எவ்விதமாய் செயல்படுகிறார் என்பதனை இப்பாடத்தில் கற்றுக்கொண்டதிலிருந்து கூறுக?